

## சமாதானம் காத்திட தம்மை அழித்தவர்கள்....
## எம் மக்களுக்காய் கடலில் கரைந்தவர்கள்....

வங்கக் கடல் மீதிலேறிய வரிப்புலிகளை வஞ்சகமாகப் பிடிக்கலாம் எனும் எண்ணத்துடன் வலம் வந்த சிங்களக் கடற்படைக்கு சமாதானம், அமைதி என்ற சொல்லுக்கு அர்த்தம் விளங்கவில்லை. அமைதியாய் வந்தவர்களைச் சீண்டிப் பார்த்தது. ஆனால் அண்ணையின் சொற்கேட்டு நடப்பவர்களல்லவா ... அதனால் செய்தியை அனுப்பிவிட்டு அமைதிகாத்து பின் செயலுக்காய் காத்திருந்த வேளையிலே, சிங்களமோ எல்லைமீறிய செயற்பாட்டுடன் எங்களின் வீரர்களை எளிதாக நினைத்து எட்டிப்பிடித்துவிடலாம் என எண்ணியவாறு அருகில் வந்தனர். ஆனால் எண்ணத்திற்கு செயல்வடிவம் கொடுப்பவர்களல்லவா எங்களின் கடற்காவிய நாயகர்கள். அதனால் எதிரி எண்ணாத காரியத்தை செய்து நின்றதை எண்ணியே கலங்கியிருப்பான் சிங்கள கடற்படையினன். கப்பலையும் தகர்த்து தாங்களும் தற்கொடையாளர்களாகி கரிகாலன் சேனை இதுவென நிரூபித்தார்கள்.

கப்பற் தலைவனாக நின்ற நஞ்சனை நினைத்தால் சாந்தமே உருவாக புன்சிரிப்புடனான வதனத்துடன் வலம் வரும் ஒரு சிறந்த கப்பற் பொறுப்பாளன். கடல் விநியோகப் பாதையிலே மிகவும் பொறுப்பாக கடமைகளை ஆற்றிய செம்மையான பணி கண்டு கடற்புலிகளின் சிறப்புத் தளபதியினால் கடற்பகுதிக்கு நியமிக்கப்பட்டவர். கப்பலிலும் தனது கடமைகளைக் காத்திரமாகச் செய்துநின்ற கப்பற் தலைவன் சிலம்பரசனை இழந்துவிட்டோம். ஆனால் அவர் தியாகத்தின் ஆழத்தை எப்படி நாம் மறப்போம்.

கப்பலுக்கு வந்ததும் பொறியியலாளனாக தனது கருமங்களை செவ்வனே செய்து கப்பலின் அதிகாரி தரத்திலே செயற்பட்டவனின் திறமையினால் கப்பலில் உள்ள அனைவரது அன்புக்குரியவனாய் வலம் வந்த கடலண்ணனையும் நாமிழந்து விட்டோம். தாயக விடுதலைக்காக சிறு வயதிலேயே தன்னை அர்ப்பணித்து படைத்துறைப் பள்ளியிலிருந்து வந்து சிறப்புத் தளபதியுடன் கூடவே இருந்து பணி செய்து கப்பலுக்கு வந்தவன். உருவத்தில் சிறியவனாய் இருந்தாலும் சிறந்ததோர் பொறியியலாளனாய் அனைவரின் அன்பிற்கும் உரியவனாய் உயர்ந்தான். அனைத்து வேலைகளையும் சிறப்புடன் செய்த வித்தகன் அம்பியையும் நாம் இழந்துவிட்டோம்.





கப்பலின் இயந்திரப் பகுதியை எந்நேரமும் கண்காணித்துக் கொண்டே பொறுப்புடன் வலம் வரும் தனேந்திரனின் பொறியியல் திறமையினை எப்படிச் சொல்வது? பொறிக்குள் வீழ்ந்தி எம் வீரர்கள் அழிக்கப்பட்டதை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வேடிக்கை மட்டுமே பார்த்திருந்தது? மெல்லிய தோற்றமும், அழகான உருவத்துடன் மென்மையாய் பழகும் சுபாவம் கொண்ட ஆற்றல் மிகு வேங்கையாம் மேகனையும் நாம் இழந்து விட்டோம். எந்த வேலையாயினும் எளிதாய் முடித்துவிட்டு வந்து நிற்கும் எழில்கண்ணனை நாம் எப்படி மறப்பது.

சிங்களக் காடையரின் அத்துமீறிய செயலினால் சீரிய வேங்கைகளாம் எங்களின் சிந்துவையும், இரும்பொறையுடன் இளம்பருதியையும் அவர்களுடன் துணை நின்ற தூயவனையும், அமுதனையும் சர்வதேசக் கடலிலே இழந்து துயர் சுமந்து நிற்பதை நாம் எப்படி மறப்பது. ஆழக் கடல்களெங்கும் தமிழன் வீரச் சரித்திரத்தை என்றென்றும் அழியாமல் வரலாறாய் மாற்றி வீரகாவியமான எங்கள் வேங்கைகளே நீங்கள் என்றும் நிலைத்து வாழ்வீர்கள்......

